# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.அன்பரசு**

பொதுச் செயலாளர்
**ஆ.செல்வம்**

மாநில துணைத் தலைவர்கள்
**மொ.ஞானத்தம்பி**
**ஏ.பெரியசாமி**
**இரா.மங்களபாண்டியன்**
**என்.வெங்கடேசன்**
**மு.சீனிவாசன்**
**கோ.பழனியம்மாள்**

மாநிலப் பொருளாளர்
**மு.பாஸ்கரன்**

மாநிலச் செயலாளர்கள்
**சி.ஆர்.இராஜகுமார்**
**இரா.ந.நம்பிராஜன்**
**சி.எஸ்.கிறிஸ்டோபர்**
**சி.பரமேஸ்வரி**
**உ.சண்முகம்**
**தெ.வாசுகி**


ஊடக செய்தி 8 / 2020

நாள் : 27.04.2020

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.அன்பரசு மற்றும் பொதுச் செயலாளர் ஆ.செல்வம் ஆகியோர் இணைந்து வெளியிடும் ஊடகச் செய்தி**

# மீண்டும் மீண்டும் அரசு ஊழியர்கள் மீதே தாக்குதல்!

# நிதி தேடலுக்கு அரசு ஊழியர்களின் உரிமைகள் தவிர வேறு எதுவும் இந்த அரசாங்கத்தின் கண்களுக்குத் தெரியாதா?

# கொரோனாவைத் தடுக்க போராடிக்கொண்டிருக்கிறோம் உங்களோடும் எங்களை போராட வைத்துவிடாதீர்கள்!

# டிஏ, சரண்டர், ஜிபிஎப் வட்டிக்குறைப்பு அரசாணைகளை உடனடியாக திரும்பப் பெற தமிழக அரசுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கோரிக்கை!

### எதிர்த்துக் கேட்க முடியாத தமிழக அரசு

கொரோனா தொற்று பரவல் காரணமாக இந்தியா முழுவதிலும் ஊரடங்கு அமல்படுத்தப்பட்ட நிலையில் தமிழ்நாடு அரசுத்துறைகளில் பணிபுரியும் அரசு ஊழியர்கள் அனைவரும் தங்கள் ஊதியத்தில் ஒரு நாள் தொகையை கொரோனா நோய்த் தொற்று தடுப்புப் பணிகளுக்கான நிதியுதவியாக அரசு கேட்டிடும் முன்னரே வழங்கிட முன்வந்து இந்தியாவிலேயே மற்ற

மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்தார்கள். தமிழக முதல்வரும் கொரோனா நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் அரசு ஊழியர்களின் சிறப்பான பங்களிப்பை மனதாரப் பாராட்டினார். தொடர்ந்து அரசு ஊழியர்கள் தங்கள் இன்னுயிரையும் பொருட்படுத்தாது கொரோனா நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர்.

ஊரடங்கு மற்றும் 144 தடை உத்தரவுகளால் தமிழகத்தின் அனைத்து தொழில்களும், வணிகமும், விவசாயமும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் கொரோனா நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கைகளை முனைப்புடன் மேற்கொள்ள ஏதுவாக தமிழக அரசு மத்திய அரசிடம் நிவாரணத் தொகையும், மத்திய அரசு தமிழக அரசுக்குத் தர வேண்டிய ஜிஎஸ்டி தொகையும் கேட்டு கடிதமும் வேண்டுகோளும் விடுத்தது. மத்திய அரசு தமிழக அரசுக்கு தரவேண்டிய ஜிஎஸ்டி தொகையை இதுநாள்வரை விடுவிக்காததோடு, கொரோனா நோய்த் தொற்று தடுப்பு நிவாரணத்திற்காக அளித்த தொகை மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது பாரபட்சமானதாக இருந்தது. மத்திய அரசு அந்தத் தொகையை ஒதுக்கீடு செய்யும் நேரத்தில் தமிழகம் கொரோனா நோயாளிகள் அதிகம் உள்ள மாநிலங்களின் பட்டியலில் இரண்டாவது இடத்தில் இருந்தது. இது குறித்து ஊடகவியலார்கள் தமிழக முதல்வரிடம் கேட்டபோது மத்திய அரசிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது என்றும் கூடிய விரைவில் மத்திய அரசு பரிசீலித்து தொகையை வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

நம்மைவிட கொரோனா நோய்த்தொற்று குறைவாக உள்ள உத்திரப்பிரேதசம் போன்ற மாநிலங்களுக்கு அதிகப்படியான தொகைகளை வழங்கிய மத்திய அரசு தமிழகத்திற்கு குறைத்து வழங்கப்பட்டதை எதிர்த்தும் அழுத்தம் கொடுத்தும் நிவாரணத் தொகையை பெற முதலமைச்சர் நடவடிக்கை எடுக்காமல் பிரதமருக்கு கடிதம் எழுதிவிட்டேன். குறைவாக அளிக்கப்பட்ட நிதி போதாது என்றும் தெரிவித்துவிட்டேன். மத்திய அரசு வழங்கும் என்ற நம்பிக்கை உள்ளதாக ஊடகத்திடம் தெரிவித்ததோடு தங்கள் அழுத்தத்தை முடித்துக் கொண்டதோடு மட்டுமல்லாமல், முதல்வரும் ஆளும்கட்சி அமைச்சர்களும் நடந்திருப்பது மிகப்பெரிய துரோகம் என்பதையும், தமிழகத்திற்கு மத்திய அரசு செய்திருப்பது தேசிய அவமானம் என்பதை மறைக்கும் வகையிலும் இன்று வரையிலும் அதுபற்றி கேள்வி கேட்டவர்களுக்கு பூசி மொழுகி பதிலளித்து வருவது பொதுமக்களை கொதிப்படைய வைத்துள்ளது.

கொரோனாவை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் பொது மக்களும், அரசு ஊழியர்களும் தமிழக அரசுக்கு முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்கிவரும் நிலையில் தமிழக அரசு அனைத்துக் கட்சியினரையும் ஒன்றிணைத்து மத்திய அரசுக்கு மிகுந்த அழுத்தம் கொடுத்து தமிழகத்திற்கான அதிகப்படியான நிதியை கேட்டுப்பெற முன் வராமல் அது வரும், வரும் என்ற நம்பிக்கையிருக்கிறது, என்றெல்லாம் சப்பைக்கட்டு கட்டுகிறதே தவிர மத்திய அரசு தமிழக

மக்களுக்கு செய்துள்ள நயவஞ்சகத்தை துரோகத்தை எதிர்த்து ஒரு வார்த்தைகூட தைரியமாக பேசவில்லை. மத்திய அரசின் தலையாட்டும் பொம்மையாக இருக்கும் தமிழக அரசு, தன்னுடைய ஆட்சி சுயநலத்திற்காக மக்களின் வாழ்வாதாரத்தோடு விளையாடி வருவது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் செயலாகும்.

**மீண்டும் மீண்டும் அரசு ஊழியர்கள் மீதே தாக்குதல்!**

இந்த நிலையில்தான் மத்திய அரசிடம் கொரோனா நிவாரண நிதியை கேட்டுப்பெற தைரியமில்லாமல், எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்கிற ரீதியில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியர்களின் உரிமைகளில் அவர்கள் போராடி பெற்ற சலுகைகளில் அடுத்தடுத்து கை வைக்க ஆரம்பித்துள்ளது.

அதன் முதற்கட்டமாக ஜனவரி 2020 முதல் ஜூலை 2021 வரையிலான காலத்திற்கு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கான அகவிலைப்படியை நிறுத்தி மத்திய அரசாங்கம் வெளியிட்ட அறிவிப்பை ஒட்டி தமிழக அரசு ஒரு அரசாணையை வெளியிட்டு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியர்கள் அனைவருக்கும் அகவிலைப்படி உயர்வை ஜூலை 2021 வரை நிறுத்தியுள்ளது. இதன்மூலம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் என அனைத்து அரசு ஊழியர்களின் பணத்திலிருந்து சுமார் ரூ.15,000 கோடியை எந்தவித நியாயப்படுத்தலும் இன்றி பிடுங்கிக்கொள்ள அரசாணை வெளியிட்டுள்ளது.

இதைவிட வெட்கக்கேடான இன்னொரு செயலை தமிழ்நாடு அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும், ஓய்வூதியர்களும் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களும் அறிய நேர்ந்துள்ளது. இதுநாள் வரை மத்திய அரசு தமிழகத்திற்கு தர வேண்டிய நிவாரணத் தொகையை பற்றி அறிவிப்புகள் எதுவும் கொடுக்காத நிலையில் அதை பெறுவதற்காக குறைந்தபட்சம் தமிழகத்தில் உள்ள பிற கட்சிகளுடன் சேர்ந்து குரலெழுப்பக்கூட முன் வராமல், ஈட்டிய விடுப்பின் 15 அல்லது 30 நாட்களை சரண்டர் செய்து தொகைபெறும் உரிமையை ஓராண்டு காலத்திற்கு தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், பெறுவதை நிறுத்தியிருப்பதை வெட்கக்கேடு என்று சொல்லாமல் என்னவென்பது? இதன்மூலம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு இந்த ஒரு ஆண்டுக்கு மொத்தமாக ரூ.2300 கோடி வரை பண இழப்பு ஏற்படும்.

இதற்கும் மேலாக தமிழக அரசு, அரசு ஊழியர்களின் ஜிபிஎப் தொகையின் வட்டி விகிதத்தை 7.9 சதவீதத்திலிருந்து 7.1 சதவீதமாகக் குறைத்து அரசு ஊழியர்களுக்கு கொரோனா அதிர்ச்சியைவிட பேரதிர்ச்சியை கொடுத்துள்ளது. இதன்மூலம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தங்கள் வருங்கால வைப்பு நிதியின் மூலம் பெறும் வட்டி விகிதத்தில் 0.8 சதவீதம் இழக்க நேரிடும்.

## மத்திய, மாநில அரசுகளின் நியாயமற்ற செயல்கள்!

தங்களுக்கு ஒரு இடர்பாடு வந்தபோது, மத்திய, மாநில அரசுகளிடம் சலுகைகளையும் தள்ளுபடிகளையும் கேட்டுப் பெற்ற பெருநிறுவனங்கள், ஏகபோக முதலாளிகள், பகாசூர தொழிலதிபர்கள் போன்றவர்களிடம் நிவாரண உதவிகளை உரிமையுடன் கேட்டுப்பெற வேண்டிய மத்திய, மாநில அரசுகள் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், போராடிப் பெற்ற உரிமைகளை காவு கொடுத்து யாசகம் பெறுவது என்பது இழிவினும் இழிவான செயலாக அல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்.

## தமிழக அரசின் அரசியல் மற்றும் நிர்வாகத் திறமையின்மை!

இன்று நாட்டிலேயே ஒழுங்காக வருமான வரி செலுத்துபவர்களாக இருக்கட்டும், அரசின் விதிகளுக்கு உட்பட்டு நடப்பவர்களாக இருக்கட்டும், சொத்துக் கணக்கு, வங்கிக் கணக்கு போன்ற அனைத்து செயல்பாடுகளிலும் வெளிப்படைத் தன்மை கொண்டவர்களாக இருப்பவர்கள் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும். ஆனால் இவர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளும் சலுகைகளும் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக மறுக்கப்பட்டு வரும் நிலையில் இழந்த தங்களின் உரிமைகளுக்காக போராடிவரும் அதே வேளையில் அரசு இயந்திரம் நின்று போகாமல் அதற்கு பக்கபலமாக இருப்பவர்களும் அரசு ஊழியர்களே. ஆனால் இத்தகைய நேர்மையாளர்கள் முதுகில்தான் தமிழக அரசு ஒவ்வொரு விஷயத்திலும் குத்தி வருகிறது. அதுவும் மத்திய அரசின் செயல் திட்டங்களை அச்சுப்பிசாகமல் மட்டுமல்ல அதற்கும் ஒருபடி மேலே போய் செயல்படுத்தக்கூடிய ராஜவிசுவாசிகள்தான் ஆளும்கட்சியின் தலைமையும் அதனதன் அமைச்சர்களும்.

மத்திய அரசாங்கம், அனைத்து மாநிலங்களும் புதிய பென்ஷன் திட்டத்தை 1.4.2004 முதல் அமல்படுத்த வேண்டும் என்ற அறிவித்த உடன் அதை ஒரு வருடம் முன்னதாகவே அதாவது 01.03.2003 முதல் தமிழகத்தில் அமல்படுத்தி ராஜ விசுவாசத்தைக் காட்டிக்கொண்டது ஆளும் அம்மாவின் அரசுதான். அதேபோல் மத்திய அரசு ஏற்படுத்திய ஊதிய மாற்றத்திலும் பல குளறுபடிகளைச் செய்து மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தை நாளது வரை பெற விடாமல் கமிஷன்கள், பரிசீலனைகள் என்ற பெயரில் கிடப்பில் போட்டு வைத்திருப்பது இந்த அரசுதான். 2016ஆம் ஆண்டு ஊதிய மாற்றம் ஏற்பட்டபோது தான் ஒப்புக்கொண்டபடி மத்திய அரசின் ஊதிய மாற்றத்திற்கு இணையாக ஊதிய மாற்றத்தை ஏற்படுத்தாமல் அதைவிட குறைவான ஊதிய மாற்ற விகிதங்களை நிர்ணயித்து பலநூறு கோடி ரூபாய்கள் அரசு ஊழியர்கள் பணத்தை இந்த அரசாங்கம் சூறையாடியதோடு, அதன்பிறகும் 21 மாதங்கள் ஊதிய மாற்ற நிலுவையை தராமல் மறுத்துவிட்ட செய்கையின் மூலம் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் இழப்பினை அரசு ஊழியர்கள் சந்திக்க நேர்ந்தது.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association

பதிவு எண் 237/84

தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


ஆக ஒவ்வொரு அரசு ஊழியரும் கடந்த ஐந்து ஆண்டுகளில் தங்களுக்கு அரசாங்கம் சட்டப்படியாக வழங்க வேண்டிய லட்சக்கணக்கான ரூபாய்களை இழந்து ஏமாற்றப்பட்டிருக்கும் இழிநிலையில் தற்போது மத்திய அரசோ அல்லது மற்ற மாநில அரசுகளோ அறிவிக்காத ஈட்டிய விடுப்பை சரண் செய்து காசாக்கிக் கொள்ளும் உரிமையை ஓராண்டுக்கு நிறுத்தி வைப்பதாக நாட்டிலேயே முதன்முறையாக அரசாணை வெளியிட்டுள்ளதும் இதே அதிமுக அரசுதான். வருங்கால வைப்பு நிதியின் வட்டி விகிதத்தை 0.8 சதவீதமாக குறைப்பதாக அரசாணை வெளியிட்டிருப்பதும் இதே அரசுதான். அகவிலைப்படியினை மத்திய அரசின் உத்தரவினை மேற்கோள் காட்டி அரசாணை வெளியிட்டுள்ளதும் இதே அரசுதான். இதன்மூலம் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் ஓய்வூதியதாரர்களும் மேலும் சிலஆயிரம் கோடி ரூபாய்களை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இது முழுக்க முழுக்க தமிழக அரசின் அரசியல் மற்றும் நிர்வாகத் திறமையின்மையை எடுத்துக் காட்டும் செயல்களாகவே பார்க்க வேண்டியுள்ளது.

**இன்னொரு போராட்டத்திற்கு எங்களை உந்தித் தள்ளாதீர்!**

கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளில் தங்கள் குடும்பத்தை விட்டு தொடர்ந்து உயிரைத் துச்சமென மதித்து கொரோனாவுடன் ஒரு பெரும் யுத்தம் நடத்திக் கொண்டிருக்கும் அரசு ஊழியர்களின் நிதி பறிப்பின்மூலம் முதுகில் குத்த நினைக்குமானால் அரசு ஊழியர்கள் ஆட்சியாளர்களுக்கு எதிராக இன்னொரு போராட்டத்திற்கு தயாராக வேண்டியதிருக்கும் என்பதை அரசாள்பவர்கள் உணர்ந்து கொண்டு, அரசு இயந்திரத்தை அதன் அச்சாணி முறியாமல் ஓட வைத்துக்கொண்டிருக்கும் அரசு ஊழியர்களுக்கு எதிராக தமிழக அரசு வெளியிட்டுள்ள அகவிலைப்படி நிறுத்தி வைப்பு, ஈட்டிய விடுப்பை சரண்செய்து தொகை பெறுதல் நிறுத்தி வைப்பு மற்றும் வருங்கால வைப்புநிதி வட்டிக்குறைப்பு அரசாணைகளை உடனே திரும்பப் பெற வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

இதுபோன்ற பழிவாங்கும் நடவடிக்கைகள் தவிர்க்கப்படாமல் இன்னொரு பெரிய போராட்டத்திற்கு அரசு ஊழியர்களை உந்தித் தள்ளிவிடாமல் பார்த்துக்கொள்வது தமிழக அரசின் கைகளில்தான் உள்ளது என்பதை இதன்மூலம் உணர்த்தக் கடமைப்பட்டுள்ளோம். தமிழக அரசு, இக்கட்டான இச்சூழ்நிலையில் அரசு ஊழியர்களின் நிலையை புரிந்து கொண்டு அவர்களை வஞ்சிக்காமல் நிதியாதாரங்களுக்கு வேறுவழிகளைக் காண வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள.

**(மு.அன்பரசு)**
மாநிலத் தலைவர்

**(ஆ.செல்வம்)**
பொதுச் செயலாளர்